தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயம்

# அபிஷேகம்

## உதவிக்குரு, குரு அபிஷேக

## ஆராதனை ஒழுங்கு

1999

(திருவிருந்து ஒழுங்கு, ஆராதனை ஒழுங்கு உற்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயம்

JAFFNA DIOCESE OF THE CHURCH OF SOUTH INDIA
THAT THEY ALL MAY BE ONE

# அபிஷேகம்

## உதவிக்குரு, குரு அபிஷேக

## ஆராதனை ஒழுங்கு

1999

(திருவிருந்து ஒழுங்கு, ஆராதனை ஒழுங்கு உற்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிருந்து எனும் பரிசுத்த நற்கருணை ஆராதனை

குரு: கடவுளை வணங்குவோமாக.

எல்லா இருதயங்களையும் எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள கடவுளே, நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்பு கூரவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும் உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம் பண்ணியருள எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஆமென்.

சபை

பல்லவி

மகிமையுண்டாக – உன்னத தேவற்கு
மகிமை யுண்டாக.

அனுபல்லவி

உகமீது சமாதானம் உறமாந்தர் மேற்றயை
உண்டாவதாக நீடூழி யூழியாக.

சரணங்கள்

1 கர்த்தாவே தேவா – வானவர் இராசா,
நித்திய தாதா, நின்மல ரூபா
சத்தியில் மிகுந்தவா சர்வத்துக்குந் தாதா,
துத்தியஞ் செய்தனம் நித்திய காலமாய் – மகிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 துத்தியஞ் செய்து - தூயபரனை
மெத்தவே தொழுது மேதினி முழுதும்
நித்தமே புகழ்ந்தனம் நீதி செயலை எண்ணி
சுத்தவுன் நாமத்திற் கித்தரை யோராலும் - மகிமை

3 ஏக குமாரா - இயேசுவெம் நாதா
ஏகோவா தனையா எம்மீ திரங்கி
உலோக பாவந் தூக்கிப் போக வந்திடு மெங்கள்
வாகன ஆடே நீ ஆகையினால் மெத்த - மகிமை

4 தரணியோர் பாவந் - தீர்த்திட வந்து
செந்நீர் சிந்திய தேவாட்டுக் குட்டியே,
பரமனின் வலப் பக்கம் பரமதி விருப்பவா,
இரங்கு மிரங்குமையா எம் செப மவைகட்கு - மகிமை

5 பரிசுத்தன் நீயே - பார் கர்த்தன் நீயே;
அருட்பெருஞ் சோதியே கிறிஸ்துவே நீயே,
திருவாவி யவனோடு திகழ்பரன் மகிமையில்
திரிகால மிருக்கின்றாய் திவ்வியதி பதியாக - மகிமை

நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நமது ஆண்டவர் தொகுத்து அருளியது

குரு: நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னதாவது:

இஸ்ரவேலே, கேள்; நம்முடைய கடவுளாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்; உன் கடவுளாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழுப் ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக என்பதே பிரதான கற்பனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்; உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்பதே.
மா 12 மத் 22

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்

குரு சொல்லுவது

சகோதரரே, நாம் இப்பொழுது கடவுளுடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்கவும், ஆண்டவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் பெற்றுக்கொள்ளவும் இங்கே கூடிவந்திருக்கிறோம். உத்தம மனஸ்தாபத்தோடும், விசுவாசத்தோடும் அவரிடத்தில் கிட்டிச் சேருவதற்காகக் கடவுளுடைய கிருபையைத் தேடி, முழங்காற்படியிட்டு, மௌனமாக நம்மை நாமே சோதித்து அறிவோமாக.

(எல்லாரும் முழங்காற்படியிட்டு (சற்று நேரம்) அமைதியாயிருந்தபின் குரு சொல்வது)

உங்கள் பாவங்களினிமித்தம் முழு இருதயத்தோடே உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, பிறரிடத்தில் அன்பும் சிநேகமுமாயிருந்து இனிக் கடவுளுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு புதிதாக்கப்பட்டவர்களாய் அவருடைய பரிசுத்த மார்க்கத்தில் நடப்போம் என்று தீர்மானித்திருக்கிற நீங்கள், நமது ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் மூலமாய்ச் சர்வ வல்லமையுள்ள கடவுளோடு ஒப்புரவாகும்படி, மறுபடியும் உங்கள் பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை ஆரபி ஆதிதாளம்

1. எந்தாய் உன்றனுக்கும் அயலார்கும் எதிரான
சொந்த பாவமெல்லாம் இதோ சொல்லி அறிக்கை
செய்தோம்
உன்றன் நல்லொளி விட்டே இருளில் நடந்தோம்,
சிந்தை நின் பெயரில் நின்றும் செய்கையில்
மாறுபட்டோர்;

2. அப்பா, இயேசுநாதா அடியார்க் கிரங்குமையா;
இப்பாவக் கறைகள் மன்னித்தாவியினாற் கழுவி
தப்பாதே யெமது மனசாட்சி உயிர்த்திடவே
இப்போதுன் னருளால் எம்மை ஏந்தி அணைத்திடுவாய்

3. நின் நாமம் உலகில் ஓங்கி நின்று மகிமையுற
எந்நாளும் புதிய உயிர் ஏற்றுப் பணி புரிய
மன்னிப்பு ஈந்து பிறர் தம்மை அணைத்திடவும்
அன்னையை ஒத்தவனே, அருளீந்து புரந்திடுவாய்

குரு எழுந்து நின்று சொல்லுவது

இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தம்மிடத்தில் உண்மையாய் மனந்திரும்புகிற யாவருக்கும் அருளப்படுகிற கிருபை நிறைந்த தேவ வசனத்தைக் கேளுங்கள்;

வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

கடவுள் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது.

ஒருவன் பாவஞ் செய்வானானால், நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே.

சற்று நேரம் அமைதியாயிருந்தபின் குரு சொல்வது

நம்முடைய பரம பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள கடவுள், உத்தம மனஸ்தாபத்தோடும், உண்மையான விசுவாசத்தோடும் தம்மிடத்திற்கு மனந்திரும்பி, தங்கள் சகோதரர் குற்றங்களை மன்னிக்கிற யாவருக்கும் பாவமன்னிப்பை அருளிச் செய்வோம் என்று மிகுந்த இரக்கமாய் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்; அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் உங்களுக்கு இரங்கி, உங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து, அவைகளினின்று உங்களை விடுதலையாக்கி, சகல நன்மையிலும் உங்களை உறுதிப்படுத்தி, நிலைநிறுத்தி உங்களை நித்திய ஜீவ கரையில் சேர்ப்பாராக.

சபை: ஆமென். தேவரீருக்கே ஸ்தோத்திர முண்டாவதாக.

இப்பகுதியுடன் உதவி குரு / குரு அபிஷேக ஆராதனை ஆரம்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக்குரு அபிஷேக
# ஆராதனை முறை

## 1 அபிஷேகம் பெறுவோரை முன் நிறுத்துதல்

*சபையார் உட்காருவார்கள்.*

*அத்தியட்சர் தமது ஆசனத்தில் உட்கார்ந்திருக்க, முறைப்படி நியமிக்கப்பட்ட ஒருவர், அபிசேஷகம் பெறுவோரை அத்தியட்சர் முன் நிறுத்திச் சொல்லுவது:-*

கர்த்தருக்குள் சங்கை பொருந்திய தகப்பனே, உதவி குருக்களாக அபிஷேகம் பெறுவதற்கு இவர்களை உமது முன் நிறுத்துகிறோம்.

**அத்தியட்சர்..**

இவர்கள் அபிஷேகம் பெறுவதற்குரிய அதிகாரப் பத்திரம் வாசிக்கப்படுவதாக

அவர்கள் அபிஷேகம் செய்வதற்கு அத்தியட்சாதீன பிறப்பித்திருக்கும் அதிகாரப்பத்திரம் வாசிக்கப்படும்.

**அத்தியட்சர்:-** ஜனங்களைப் பார்த்து சொல்லுவது:-

பிரியமானவர்களே, கடவுளுக்குச் சித்தமானால், உதவி குருக்களாக அபிஷேகம் பெற நாம் விரும்புவோர், இவர்களே இவர்கள் தகுந்த படிப்பும், தேவ பக்தியுள்ள வாழ்க்கையுமுடையவர்களென்றும், இப்பணிவிடையில் கடவுளுக்கு ஊழியம் செய்ய கிரமமாய் அழைக்கப்பட்டவர்களென்றும், இவர்களை விசாரிக்கும்படியாகவும், பரீட்

சிக்கும்படியாகவும் நியமிக்கப்பட்டவர்கள் இவர்களைக் குறித்துச் சொல்ல, நீங்கள் இப்பொழுது கேட்டீர்கள். இவ்வபிஷேகம் பெறுவதற்கு இவர்களில் யாதொரு தடையுண்டென்று உங்களில் யாராகிலும் அறிந்திருந்தால், கர்த்தருடைய நாமத்தினாலே இங்கு முன் வந்து அதைத் தெரிவிக்கவேண்டும்.

சபை நிற்க, அத்தியட்சர் சொல்லுவது:–

நாம் நம்மிலே தகுதியுள்ளவர்களல்ல; நம்முடைய தகுதி கடவுளிலிருந்து உண்டாகிறது.

அபிஷேகம் பெறுவதற்கு, இவர்கள் கடவுளின் கிருபையால் தகுதியுள்ளவர்கள் என்று நம்புகிறீர்களா?

சபை:– இவர்கள் தகுதியுள்ளவர்களென்று நம்புகிறோம். கடவுளுக்கே மகிமையுண்டாவதாக.

## 2 தேவ வசனப் போதனை

கர்த்தர் உங்களோடு இருப்பாராக.

அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

ஜெபம் பண்ணக்கடவோம்

(சபையார் முழங்கால்படியிட்டிருக்க)

சர்வ வல்ல கடவுளே, சகல நல் ஈவுகளையும் அருளுகிறவரே, உமது திருச்சபையில் வெவ்வேறான பணிவிடைகளை, உமது ஒரே ஆவியானவரால் ஏற்படுத்தியிருக்கிறீரே, உதவிக் குருக்களாகும்படி இப்பொழுது அழைக்கப்பட்டிருக்கும் உமது ஊழியக்காரராகிய இவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கிப் பாரும், உமது சுவிசேஷ சத்தியத்தால் இவர்களைப் பூரணப்படுத்தி, குற்றமற்ற நடக்கையால் இவர்களை அலங்கரித்தருளும், உமது பரிசுத்த ஆவியின் வல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லமையால் இவர்களை நிரப்பியருளும். உமது நாமத்திற்கு மகிமையுண்டாகவும், உமது திருச்சபை ஊன்றக் கட்டப்படவும், இவர்கள் தங்கள் வார்த்தையினாலும், நல்ல முன் மாதிரியினாலும், உண்மையோடும், மகிழ்ச்சியோடும் உமக்குப் பணிவிடை செய்ய அனுக்கிரகித்தருளும் உம்மோடும் பரிசுத்த ஆவியோடும், சதாகாலமும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்

பழைய ஏற்பாட்டு பாடம்: ஏசாயா 42: 1 - 9

சங்கீதம்: 84 (அல்லது) ஓர் கீதம்

நிருப வாக்கியம்: 1 தீமோத்தேயு 3 : 8 - 13

சபை எழுந்து நிற்க,

சுவிசேஷ வாக்கியம்: லூக்கா 12: 35 - 38

சபை உட்கார்ந்திருக்க,

பிரசங்கம்.

சபை எழுந்து நின்று,
நிசேயே விசுவாசப்பிரமாணம் சொல்ல

சபை: வானத்தையும் பூமியையும் காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஒரே கடவுளை விசுவாசிக்கிறேன்.

ஒரே கர்த்தருமாய் கடவுளுடைய ஒரே பேறான குமாரனுமாயிக்கிற இயேசுக்கிறிஸ்துவையும் விசுவாசிக்கின்றேன். அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே, தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவர். தெய்வத்தில் தெய்வம், சோதியில் சோதி மெய்த் தெய்வத்தில் மெய்த் தெய்வம், உண்டாக் கப்படாமல் ஜெநிப்பிக்கப்பட்டவர். பிதாவோடே ஒரே தன்மையுடையவர். சகலத்தையும் உண்டாக்கினவர் மனிதராகிய நமக்காகவும் நமக்கு இரட்சிப்பு உண் டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கிப் பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் அவதரித்து மனுஷனானார்; நமக்காகப் பொந்தியு பிலாத்து வின் காலத்தில், சிலுவையில் அறையுண்டு, பாடு பட்டு, அடக்கம் பண்ணப்பட்டார்; தேவ வாக்கி யங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்; பரமண்டலத்துக்கேறிப் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்; உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க மகிமையோடு திரும்ப வருவார். அவருடைய இராச்சியம் முடிவற்றது.

சர்த்தருமாய், ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவரு மாய், பிதாவோடும் குமாரனோடுங் கூடத் தொழுது தோத்திரிக்கப்படுகிறவருமாய். தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற. பரிசுத்த ஆவியையும் விசு வாசிக்கிறேன். ஒரே பரிசுத்த பொதுவான அப் போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக் கிறேன். பாவ மன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட, ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன். மரித் தோர் உயிர்த்தெழுதலும், மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறேன். ஆமென்

கீதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 பரீட்சித்தல்

சபை உட்கார்ந்திருக்க,

அபிஷேகம் பெறுவோர் நின்று கொண்டிருக்க, அத்தியட்சர் தமது ஆசனத்திலமர்ந்து சொல்லுவது:-

உதவி குருக்கள் செய்யவேண்டிய பணிவிடை யாதெனில்:-

தாங்கள் நியமிக்கப்படும் சபையில் தேவ வசனத்தை, போதித்தல்; தேவ ஆராதனைகளில், விசேஷமாய் பரிசுத்த நற்கருணை பரிமாறுவதில் குருக்களுக்கு உதவி செய்தல்; ஞானஸ்நானம் கொடுத்தல்; சபைக்குரிய லௌகீக அலுவல்களைச் செய்தல்; தரித்திரருக்கும் நிர்ப்பந்தருக்கும் நோயாளிகளுக்கும் உதவிபுரிதல்; குழந்தைகளுக்கும், ஞானஸ்நான ஆயத்தக்காரருக்கும் விசுவாச சத்தியத்தைப் படிப்பித்தல்; பொதுப்பட, சபை ஊழியத்திலும் சுவிசேஷ வேலையிலும், குருக்களுக்கு உதவிசெய்தல்.

சகோதரரே, உதவி குருக்களின் கடமைகள் இவைகளே. கடவுளின் திருச்சபையில் இப்பணிவிடை செய்வதற்கு, அவரால் உண்மையாய் அழைக்கப்பட்டிருக்கிறீர்களென்று நீங்கள் நம்புகிறீர்களா?

மறுமொழி: அப்படியே நம்புகிறேன்.

கடவுளை மகிமைப்படுத்த வேண்டுமென்ற, ஆர்வம், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பேரிலுள்ள அன்பு, மனிதர் இரட்சிக்கப்பட வேண்டுமென்ற ஆசை ஆகிய இவைகள் தானா, உங்கள் சொந்த இருதயத்தை நீங்கள் அறிந்தமட்டில், இப்பணிவிடையில் நீங்கள் பிரவேசிப்பதற்கு உங்களை ஏவிவிட்ட முக்கிய நோக்கங்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமொழி: என் இருதயத்தை நான் அறிந்த மட்டில் இவைகள் தான் என் முக்கிய நோக்கங்கள்.

இரட்சிப்புக்கு அவசியமானவைகளெல்லாம் பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியுள்ளன வென்றும், அவ்வேதமே விசுவாசத்திற்கு உன்னதமும் தீர்க்கமுமான அளவுகோல் என்றும் ஒப்புக் கொள்ளுகிறீர்களா?

மறுமொழி: அவ்வாறே ஒப்புக்கொள்ளுகிறேன்.

வேதத்தில் காட்டப்பட்டிருக்கும் விசுவாசத்திற்கு சாட்சி கொடுத்து, அதைப் பாதுகாப்பவை, அப்போஸ்தலர், நிசேயா விசுவாசப் பிரமாணங்களென்று ஒப்புக் கொள்ளுகிறீர்களா?

மறுமொழி: அப்படியே ஒப்புக்கொள்ளுகிறேன்.

பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பதிலும், அதற்கனுகூலமான மற்ற நூல்களைப் படிப்பதிலும் கருத்துள்ளவர்களாயிருப்பீர்களா?

மறுமொழி: ஆண்டவருடைய ஒத்தாசையால் அப்படியே செய்வேன்.

எல்லா மனிதருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி, உங்களிலுள்ள தேவ வரத்தை அனல் மூட்டி எழுப்புவீர்களா?

மறுமொழி: ஆண்டவருடைய ஒத்தாசையால் அப்படியே செய்வேன்.

நீங்களும், உங்கள் வீட்டாரும், கிறிஸ்துவின் மந்தைக்கு நல்ல முன்மாதிரிகளாயிருக்கும்படி, ஜெபத்தோடும், அடக்க ஒடுக்கத்தோடும், நீங்கள் ஜீவித்து, உங்கள் குடும்பத்தையும் அவ்விதமாய் நடத்த முயலுவீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமொழி: ஆண்டவருடைய ஒத்தாசையினால் அப்படியே செய்வேன்.

தென் இந்திய திருச்சபையில் இத்திருப் பணிவிடையைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று நம்புகிற நீங்கள், அதன் சிட்சை முறையை ஏற்றுக்கொண்டு, திருச்சபையால் உங்கள்மேல் நியமிக்கப்படுவோருக்கு சுவிசேஷத்தால் பெற்றெடுக்கப்பட்ட குமாரராக அடங்கி நடப்பீர்களா?

மறுமொழி: கடவுளின் உதவியினால் அப்படியே செய்வேன்.

சபையார் முழங்கால்படியிட, அபிசேஷகம் பெறுவோர் அத்தியட்சர் முன் முழங்காற்படியிட்டிருக்க, அத்தியட்சர் நின்று சொல்லுவது:-

இவைகளெல்லாவற்றையும் செய்யவேண்டுமென்றமனதை உங்களுக்குத் தந்திருக்கிற நம்முடைய பரம பிதாவாகிய சர்வ வல்ல கடவுள், இவைகளெல்லாவற்றையும் செய்து முடிக்கத்தக்கதாகத் தமது கிருபையையும் உங்களுக்குத் தந்தருளுவாராக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்; அவர் அப்படியே செய்வார்.

ஆமென்

## 5. அபிசேகம்

மௌன ஜெபம் செய்ய் சபையாரை அத்தியட்சர் அழைப்பார்

"மாதூய ஆவி இரங்கும்" எனும் கீதம் முழங்காலில் நின்று பாடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியட்சர் எழுந்து நின்று சொல்லுவது:-

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உமது மிகுந்த காருண்யத்தினால், உமது நேச குமாரனாகிய இயேசு கிறிஸ்து, அடிமையின் ரூபமெடுக்கவும், சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தவும், நீர் அவரை அனுப்பினீரே. அதற்காக நாங்கள் உம்மை மகிமைப்படுத்துகிறோம். நீர் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினீர்; அதற்காகவும் நாங்கள் உம்மைப் போற்றுகிறோம். பெரியவனாக விரும்புகிறவன் பணிவிடைக்காரனாக வேண்டுமென்றும் அவர் மூலமாகவே எங்களுக்குக் கற்பித்திருக்கிறீர். உமது திருச்சபையில் பணிவிடை செய்யும்படியாக உதவி குருக்களாக இவர்களைக் கிருபையாக அழைத்திருப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்

அத்தியட்சர் நின்று கொண்டே அபிசேகம் பெறுவோர் ஒவ்வொருவர் தலைமீதும் தம் கரங்களை வைத்து பின்வரும் வார்த்தைகளை ஒவ்வொருவருக்காகவும் சொல்லுவர்.

உமது ஊழியக்காரர் ஆகிய ........................ மேல் உமது பரிசுத்த ஆவியை அனுப்பியருள வேண்டுமென்று மகா தாழ்மையோடு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். உமது நாமத்திலே உமது மகா திவ்விய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து உமது திருச்சபையில் உதவி குருவாக இவரை இப்பொழுது அபிஷேகம் செய்கிறோம். ஆமென்.

(ஒவ்வொரு தடவையும் சபையார் 'ஆமென்' என்று சொல்லவும்)

(அபிஷேகம் பெற்ற எல்லோருக்காகவும் அத்தியட்சர் தொடர்ந்து ஜெபிப்பார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் செய்த வாக்குத்தத்தங்களை உண்மையாய் நிறைவேற்றவும், தங்கள் ஊழியத்திலே உறுதியாய் நிலைத்திருக்கவும், உமது சுவிஷேசத்தைத் தைரியமாய்ப் பிரஸ்தாபப்படுத்தவும் இவர்களுக்கு உமது கிருபையைத் தந்தருளும் இவர்கள் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு, நன்னம்பிக்கையில் பெருகி, உமது குமாரனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் அன்பிலே வேரூன்றி நிலை நிற்கும்படி அருள்புரியும். அவருக்கும், தேவரீருக்கும், பரிசுத்த ஆவிக்கும் கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக ஆமென்

(அபிஷேகம் பெற்றவர் இன்னும் முழங்காலில் நிற்க, ஒவ்வொருவருக்கும் ஒரு வேத புத்தகத்தைக் கொடுத்து அத்தியட்சர் சொல்லுவது)

கடவுளின் வசனத்தைப் பிரசங்கிக்கவும், அவரது ஜனத்திற்கு ஊழியம் செய்யவும், நீர் பெற்றுக்கொண்ட அதிகாரத்தின் அடையாளமாக இதைப் பெற்றுக்கொள்ளுவீராக

(அந்நியோந்நியத்தின் வலது கை கொடுத்து அத்தியட்சர் பின்னும் சொல்லுவது:-)

அந்நியோந்நியத்தின் வலது கையை உமக்குக் கொடுத்து இப்பணிவிடையில் எங்களோடு பங்கு பெறும்படி உம்மை எங்களுடன் ஏற்றுக்கொள்ளுகிறோம்,

(யாவரும் எழுந்து நிற்க அத்தியட்சர் சொல்லுவது:-)

............................ ஆகிய இவர்கள் கடவுளுடைய திருச்சபையின் உதவி குருக்களாக இருக்கிறார்களென்று, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அறிவிக்கிறோம்.

சபை ஆமென் கடவுளுக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக

புகழ்ச்சியின் கீதம் பாடப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு அபிஷேக ஆராதனை முறை

## 1 அபிஷேகம் பெறுவோரை முன் நிறுத்துதல்

சபையார் உட்காருவார்கள்.
அத்தியட்சர் தமது ஆசனத்தில் உட்கார்ந்திருக்க, முறைப் படி நியமிக்கப்பட்ட ஒருவர், அபிசேஷகம் பெறுவோரை அத்தியட்சர் முன் நிறுத்திச் சொல்லுவது:-

கர்த்தருக்குள் சங்கை பொருந்திய தகப்பனே, உ... குருக்களாக அபிஷேகம் பெறுவதற்கு இவர்களை உமது முன், நிறுத்துகிறோம்.

அ ...தியட்சர்...

இவர்கள் அபிஷேகம் பெறுவதற்குரிய அதிகாரப் பத்திரம் வாசிக்கப்படுவதாக

அவர்கள் அபிஷேகம் செய்வதற்கு அத்தியட்சாதீனம் பிறப்பித்திருக்கும் அதிகாரப்பத்திரம் வாசிக்கப்படும்.

**அத்தியட்சர்:-** ஜனங்களைப் பார்த்து சொல்லுவது:-

பிரியமானவர்களே, கடவுளுக்குச் சித்தமானால், ... குருக்களாக அபிஷேகம் பெற நாம் விரும்புவோர், இவர்களே இவர்கள் தகுந்த படிப்பும், தேவ பக்தியுள்ள வாழ்க்கையுமுடையவர்களென்றும், இப்பணிவிடையில் கடவுளுக்கு ஊழியம் செய்ய கிரமமாய் அழைக்கப்பட்டவர்களென்றும், இவர்களை விசாரிக்கும்படியாகவும், பரீட்சிக்கும்படியாகவும் நியமிக்கப்பட்டவர்கள் இவர்களைக்

குறித்துச் சொல்ல, நீங்கள் இப்பொழுது கேட்டீர்கள். இவ்வபிஷேகம் பெறுவதற்கு இவர்களில் யாதொரு தடையுண்டென்று உங்களில் யாராகிலும் அறிந்திருந்தால், கர்த்தருடைய நாமத்தினாலே இங்கு முன் வந்து அதைத் தெரிவிக்கவேண்டும்.

**சபை நிற்க, அத்தியட்சர் சொல்லுவது:-**

நாம் நம்மிலே தகுதியுள்ளவர்களல்ல; நம்முடைய தகுதி கடவுளிலிருந்து உண்டாகிறது.

அபிஷேகம் பெறுவதற்கு, இவர்கள் கடவுளின் கிருபையால் தகுதியுள்ளவர்கள் என்று நம்புகிறீர்களா?

சபை:- இவர்கள் தகுதியுள்ளவர்களென்று நம்புகிறோம். கடவுளுக்கே மகிமையுண்டாவதாக.

## 2 தேவ வசனப் போதனை

கர்த்தர் உங்களோடு இருப்பாராக.

**அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.**

ஜெபம் பண்ணக்கடவோம்

(சபையார் முழங்கால்படியிட்டிருக்க)

சர்வ வல்ல கடவுளே, சகல நல் ஈவுகளையும் அருளுகிறவரே, உமது திருச்சபையில் வெவ்வெறான பணிவிடைகளை, உமது ஒரே ஆவியானவரால் ஏற்படுத்தியிருக்கிறீரே. குருக்களாகும்படி இப்பொழுது அழைக்கப்பட்டிருக்கும் உமது ஊழியக்காரராகிய இவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கிப் பாரும். உமது சுவிசேஷ சத்தியத்தால் இவர்களைப் பூரணப்படுத்தி, குற்றமற்ற நடக்கையால் இவர்களை அலங்கரித்தருளும், உமது பரிசுத்த ஆவியின் வல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமையால் இவர்களை நிரப்பியருளும். உமது நாமத்திற்கு மகிமையுண்டாகவும், உமது திருச்சபை ஊன்றக் கட்டப்படவும், இவர்கள் தங்கள் வார்த்தையினாலும், நல்ல முன் மாதிரியினாலும், உண்மையோடும், மகிழ்ச்சியோடும் உமக்குப் பணிவிடை செய்ய அனுக்கிரகித்தருளும். உம்மோடும் பரிசுத்த ஆவியோடும், சதாகாலமும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்

பழைய ஏற்பாட்டு பாடம்: எசேக்கியல் 33: 1 - 9

சங்கீதம்: 99 (அல்லது) ஓர் கீதம்

நிருப வாக்கியம்: 1 பேதுரு 5 : 1 - 11

சபை எழுந்து நிற்க,

சுவிசேஷ வாக்கியம்: யோவான் 10 : 1 - 16

சபை உட்கார்ந்திருக்க,

பிரசங்கம்.

சபை எழுந்து நின்று,

நிசேயா விசுவாசப்பிரமாணம் 8ம் பக்கம்

கீதம்.

## 4 பரீட்சித்தல்

சபை உட்கார்ந்திருக்க,

அபிஷேகம் பெறுவோர் நின்று கொண்டிருக்க, அத்தியட்சர் தமது ஆசனத்திலமர்ந்து சொல்லுவது:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபைத் தலைவரும் இராஜாவுமாயிருக்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே, ஜெபத்தோடு கைகளை வைத்து. உங்களை குருக்களாக அபிஷேகம் செய்யும்படி இங்கு கூடியிருக்கிறோம். தமது சரீரமாகிய சபை ஊன்றக் கட்டப்படுவதற்காக அவரே உன்னதத்திற்கு ஏறி மனிதருக்கு வரங்களை அருளிச் செய்திருக்கிறார்.

நீங்கள் அழைக்கப்படும் ஊழியத்திற்கும் உத்தியோகத்திற்கும் கடவுள் தாமே இவ்வபிஷேகத்தில், கிருபையையும் அதிகாரத்தையும் அருளுகிறார் என்று நம்புகிறோம். தமது திருச்சபை செய்யும் ஜெபத்திற்கு உத்தரவாகவும், அவரால் நியமிக்கப்பட்ட பணிவிடைக்காரருடைய சொற்கள் செயல்கள் மூலமாகவும் அவ்வாறு செய்கிறார் என்றும் நம்புகிறோம் சற்று முன்பு நாம் ஒன்று சேர்ந்து விசுவாசப் பிரமாணத்தை சொல்லுகையில், நாம் அறிக்கையிட்ட விசுவாசத்தின்படி, ஒரே பரிசுத்த பொதுவான அப்போஸ்தல திருச்சபையின் ஒரு பாகமாகவே நாம் கிரியை செய்கிறோம் நாம் பேசுகிறோம்.

ஆகையால் உண்மையாகவே இந்த விசுவாசத்தை உடையவர்களாயிருந்து, இந்தப் பணிவிடையைத் நிறைவேற்ற கடவுளின் கிருபையைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்களென்பதை நாங்கள் அறிந்துகொள்ளும்படியாக, இந்த கேள்விகளுக்கு நீங்கள் உத்தரவு சொல்ல உங்களைக் கேட்டுகொள்கிறேன்.

கடவுளின் திருச்சபையில் இப்பணிவிடை செய்வதற்கு அவரால் உண்மையாய் அழைக்கப்பட்டிருக்கிறீர்களென்று நீங்கள் நம்புகிறீர்களா?

மறுமொழி: அப்படியே நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளை மகிமைப்படுத்த வேண்டுமென்ற, ஆர்வம், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பேரிலுள்ள அன்பு, மனிதர் இரட்சிக்கப்பட வேண்டுமென்ற ஆசை ஆகிய இவைகள் தானா, உங்கள் சொந்த இருதயத்தை நீங்கள் அறிந்தமட்டில், இப்பணிவிடையில் நீங்கள் பிரவேசிப்பதற்கு உங்களை ஏவிவிட்ட முக்கிய நோக்கங்கள்?

மறுமொழி: என் இருதயத்தை நான் அறிந்த மட்டில் இவைகள் தான் என் முக்கிய நோக்கங்கள்.

இரட்சிப்புக்கு அவசியமானவைகளெல்லாம் பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியுள்ளன வென்றும், அவ்வேதமே விசுவாசத்திற்கு உன்னதமும் தீர்க்கமுமான அளவுகோல் என்றும் ஒப்புக் கொள்ளுகிறீர்களா?

மறுமொழி: அவ்வாறே ஒப்புக்கொள்ளுகிறேன்.

வேதத்தில் காட்டப்பட்டிருக்கும் விசுவாசத்திற்கு சாட்சி கொடுத்து, அதைப் பாதுகாப்பவை, அப்போஸ்தலர், நிசேயா விசுவாசப் பிரமாணங்களென்று ஒப்புக் கொள்ளுகிறீர்களா?

மறுமொழி: அப்படியே ஒப்புக்கொள்ளுகிறேன்.

பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பதிலும், அதற்கனுகூலமான மற்ற நூல்களைப் படிப்பதிலும் கருத்துள்ளவர்களாயிருப்பீர்களா?

மறுமொழி: ஆண்டவருடைய ஒத்தாசையால் அப்படியே செய்வேன்.

கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகளாக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்களென்பதை உணர்ந்துகொண்டு, கடவுளின் கிருபையுள்ள சுவிசேஷத்தைக் குறித்து எல்லா மனிதருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியாயிருக்கும்படி, உங்களிலிருக்கும் தேவ வரத்தை பரிசுத்த ஆவியின் ஒத்தாசையால் இடைவிடாமல் அனல் மூட்டி எழுப்பிவிடுவீர்களா?

மறுமொழி: ஆண்டவருடைய ஒத்தாசையால் அப்படியே செய்வேன்

உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கும் ஜனங்களுக்கு கடவுளின் வார்த்தையை உத்தமமாய் போதித்து பிரசங்கம் செய்வீர்களா? நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கட்டளையிட்டப்படி அவர்களுக்கு சாக்கிரமெந்துகளை வழங்குவீர்களா?

மறுமொழி: ஆண்டவருடைய ஒத்தாசையினால் அப்படியே செய்வேன்.

நீங்கள் உண்மையுள்ள காவற்காரராகவும் மந்தையின் மேய்ப்பராகவும் இருப்பீர்களா? அவர்களுக்குள் அன்பும் சமாதானமும் நிலைத்திருக்க முயற்சிப்பீர்களா? பாவிகளை மனந்திரும்பச் செய்து, அவர்களுக்கு கடவுளின் பாவ மன்னிப்பை அறிவிப்பீர்களா?

மறுமொழி: ஆண்டவருடைய ஒத்தாசையினால் அப்படியே செய்வேன்

கிறிஸ்துவினிமித்தம் நோயாளிகளை சந்தித்து, தரித்திரரையும் நிர்ப்பந்தரையும் பரிபாலித்து, ஒடுக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய உண்மையுள்ளவர்களாக இருப்பீர்களா?

மறுமொழி: ஆண்டவருடைய ஒத்தாசையினால்; அப்படியே செய்வேன்

சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் ஊழியம் செய்வதற்குத் தகுதியுள்ளவர்களாயிருக்கவும், சரீரமுழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினால் ஊன்றக்கட்டப்படவும், தாங்கள் பெற்றிருக்கும் கடவுளின் பற்பல ஈவுகளையும் உத்தமமாக உபயோகப்படுத்தும் உக்கிரகாரணக்காரராயிருக்க ஜனங்களுக்கு உதவி செய்வீர்களா?

மறுமொழி: ஆண்டவருடைய ஒத்தாசையினால் அப்படியே செய்வேன்

நீங்களும், உங்கள் வீட்டாரும் கிறிஸ்துவின் மந்தைக்கு நல்ல முன் மாதிரிகளாயிருக்கும்படி, ஜெபத்தோடும் அடக்க ஒடுக்கத்தோடும் நீங்கள் ஜீவித்து, உங்கள் குடும்பத்தாரையும் அவ்விதமாய் நடத்த முயலுவீர்காளா?

மறுமொழி: ஆண்டவருடைய ஒத்தாசையினால் அப்படியே செய்வேன்.

தென் இந்திய திருச்சபையில் இத்திருப் பணிவிடையைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று நம்புகிற நீங்கள், அதன் சிட்சை முறையை ஏற்றுக்கொண்டு, திருச்சபையால் உங்கள்மேல் நியமிக்கப்படுவோருக்கு, சுவிசேஷத்தால் பெற்றெடுக்கப்பட்ட குமாரராக அடங்கி நடப்பீர்களா?

மறுமொழி: கடவுளின் உதவியினால் அப்படியே செய்வேன்.

சபையார் முழங்கால்படியிட, அபிசேஷகம் பெறுவோர் அத்தியட்சர் முன் முழங்காற்படியிட்டிருக்க, அத்தியட்சர் நின்று சொல்லுவது:-

இவைகளெல்லாவற்றையும் செய்யவேண்டுமென்றமனதை உங்களுக்குத் தந்திருக்கிற நம்முடைய பரம பிதாவாகிய சர்வ வல்ல கடவுள், இவைகளெல்லாவற்றையும் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிக்கத்தக்கதாகத் தமது கிருபையையும் உங்களுக்குத் தந்தருளுவாராக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்; அவர் அப்படியே செய்வார்.

ஆமென்

## 5. அபிசேகம்

மௌன ஜெபம் செய்ய சபையாரை அத்தியட்சர் அழைப்பார்

"மாதூய ஆவி இறங்கும்" எனும் கீதம் முழங்காலில் நின்று பாடப்படும்.

மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, எங்கள் பேரிலுள்ள உமது அளவில்லா அன்பினாலும், தயவினாலும் உமக்கு சொந்த ஜனமாகவும், ராஜரீக ஆசாரியக் கூட்டமாகவும், பரிசுத்த ஜாதியாகவும் இருக்கும்படி எங்களைத் தெரிந்தெடுத்தீரே; உமது ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை பெரிய பிரதான ஆசாரியராகவும், நித்திய இரட்சிப்புக்குக் காரணருமாகவும் எங்களுக்குத் தந்தருளினீரே; கடவுளே, அதற்காக உம்மை மகிமைப் படுத்துகிறோம். அவருடைய மரணத்ினாலே மரணத்தை வென்று, பரலோகத்திற்கு ஏறிச்சென்று தாம் மகிமையோடு திரும்ப வருமளவும், தமது சரீரமாகிய திருச்சபை ஊன்றக் கட்டபடுவதற்கு தமது ஜனத்தின்மேல் தமது ஈவுகளை ஏராளமாகப் பொழிந்தருளி, சிலரை அப்போஸ்தலராகவும் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் தந்தருளினார். அதற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

அத்தியஷர் தமது கரத்தை அபிஷேகம் பெறுவோர் ஒவ்வொருவர் தலைமீதும் வைக்க, குருக்களும் தங்களது வலது கரங்களை அவ்வாறே வைத்திருக்க, ஒவ்வொருவருக்கும் அத்தியஷர் சொல்லவேண்டிய வார்த்தைகள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது ஊழியக்காரர் ஆகிய ......... ......... ...
மேல் உமது பரிசுத்த ஆவியை அனுப்பியருளவேண்டுமென்று மகாதாழ்மையோடு உம்மை வேண்டிக்கொள்கிறோம். உமது வார்த்தையையும் சாக்கிரமெந்துக்களையும் வழங்கவும், மனஸ்தாபப்படும் பாவிகளுக்கு உமது பாவ விமோசனத்தைக் கூறி அறிவிக்கவும், உமது மந்தையை மேய்க்கவும், உமது நாமத்திலே உமது திவ்ய சித்தத்துக்குக் கீழ்படிந்து உமது திருச்சபையில் இருவருக்கு அதிகாரநிதைக் கொடுத்து. குரு பணிவிடைக்கு இவரை இப்பொழுது அபிஷேம் செய்கிறோம் ஆமென்

ஒவ்வொருவருக்காகவும் சபையார் 'ஆமென்' என்று சொல்லவும். பின்பு அத்யட்சர் அபிஷேகம் பெற்ற எல்லோருக்காகவும் தொடர்ந்து ஜெபிப்பார்

ஆண்டவரே, உமக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளை செலுத்தும்படி, இவர்களுக்கு உமது கிருபையைத் தந்தருள வேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்கிறோம். உமது இரட்சிப்பின் சுவிஷேசத்தைக்கூறி அறிவிக்கும்படி சகல அறினாலும் வாக்கு வல்லமையினாலும் இவர்களை நிரப்பியருளும். ஆடுகளுக்காகத் தமது ஜீவனைக்கொடுத்த நல்ல மேய்ப்பரைப் பின்பற்றுபவர்களாகத் தங்கள் மந்தையை விழிப்போடும், அன்போடும் பாதுகாப்பவர்களாக்கியருளும். உமது பார்வையில் கண்டிக்கப்படாதவர்களாக், எல்லாக் காரியங்களிலும் தங்கள் பணிவிடையை நிறைவேற்ற உதவி புரிந்தருளும் முடிவு பரியந்தம் நிலைத்திருந்து, உமது உத்தம ஊழியக்காரர் அனைவரோடும் கூட, உமது நித்திய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்க அருள்புரியும். பிதாவே உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே கடவுளாகக் தொழுது ஸ்தோத்தரிக்கப்பட்டு, சாதாகாலமும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அபிஷேகம் பெற்றவர் இன்னும் முழங்காலில் நிற்க, ஒவ்வொருவருக்கும் ஒரு வேத புத்தகத்தைக் கொடுத்து அத்தியட்சர் சொல்லுவது)

கடவுளின் வசனத்தைப் பிரசங்கிக்கவும், பணிவிடை செய்யும்படி நீர் நியமிக்கப்படும் சபைகளில் சாக்கிரமெந்துக்களை வழங்கவும், நீர் பெற்றிருக்கும் அதிகாரத்தின் அடையாளமாக இதைப் பெற்றுக்கொள்ளுவீராக.

(அந்நியோந்நியத்தின் வலது கை கொடுத்து அத்தியட்சர் பின்னும் சொல்லுவது:-)

அந்நியோந்நியத்தின் வலது கையை உமக்குக் கொடுத்து இப்பணிவிடையில் எங்களோடு பங்கு பெறும்படி உம்மை எங்களுடன் ஏற்றுக்கொள்ளுகிறோம்,

(யாவரும் எழுந்து நிற்க அத்தியட்சர் சொல்லுவது:-)

........................................ ஆகிய இவர்கள் கடவுளுடைய திருச்சபையின் உதவி குருக்களாக இருக்கிறார்களென்று, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அறிவிக்கிறோம்.

சபை ஆமென் கடவுளுக்கேஸ்தோத்திரமுண்டாவதாக.

புகழ்ச்சியின் கீதம் பாடப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லித்தானியா

பின்வரும் லித்தானியாவை ஒரு உதவியாளன் நடத்தலாம்.

குரு: ஜெபம் பண்ணக் கடவோம்.

எல்லா மனிதருக்காகவும் ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் செய்து ஸ்தோத்திரங்களைச் செலுத்த வேண்டுமென்று கற்பித்தருளின, சர்வ வல்லமையுள்ள கடவுளே எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்.

எங்குமுள்ள திருச்சபைக்குத் தேவரீர் உண்மையும் ஐக்கியமும், ஏக சிந்தையுமுள்ள மனதை இடைவிடாமல் அருளிச் செய்யும் மென்று நாங்கள் கேட்கும் போது,

சபை ஏற்றுக் கொண்டருளுமே, தேவா - இப்போ ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்

குரு: உம்முடைய திருநாமத்தை அறிக்கையிடுகிற யாவரும், உமது பரிசுத்த வசனத்தின் சத்தியத்தை குறித்து இசைந்த மனதுள்ளவர்களாயிருந்து, தைரியத்தோடும் உண்மையோடும் அதற்குச் சாட்சி பகர அநுக்கிரகஞ் செய்யுமென்று நாங்கள் கேட்கும் போது.

சபை ஏற்றுக்கொண்டருளுமே, தேவா - இப்போ ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்.

குரு: சகல தேசத்தாரையும், நீதியின் பாதையிலும், சமாதான வழியிலும் நடத்தியருளுமென்று நாங்கள் கேட்கும்போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை ஏற்றுக்கொண்டருளும், தேவா - இப்போ
ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்.

குரு: நாங்களும் மற்றெல்லா மனிதரும், தேவ பக்தியோடும். சாந்தத்தோடும் ஆளப்படும்படி மனிதருடைய விஷயங்களில் அதிகாரம் வகிப்பவர்களையும் எங்களை ஆளுகிறவர்களையும் உமது பரிசுத்தமும், சமாதானமுமான ஞானத்தால் நடாத்தியருளுமென்று நாங்கள் கேட்கும்போது,

சபை ஏற்றுக்கொண்டருளுமே, தேவா - இப்போ
ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்.

குரு: எல்லா அத்தியட்சர்களும், குருமாரும், உதவிக்குருமாரும் விசேஷமாக ...... என்னும் எங்கள் பிரதம அத்தியட்சரும் ...... ...என்னும் எங்கள் அத்தியட்சரும், தங்கள் நடக்கையினாலும், போதகத்தினாலும் சத்தியமும் ஜீவனுமுள்ள உமது வசனத்தைப் பிரசித்தப்படுத்தி, உமது பரிசுத்த சாக்கிரமெந்துகளை ஒழுங்காயும் செம்மையாயும் கொடுக்க, அவர்கள் அனைவருக்கும், உமது கிருபையை அருளிச் செய்யுமென்று நாங்கள் கேட்கும் போது,

சபை ஏற்றுக்கொண்டருளும், தேவா - இப்போ
ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்

குரு: சகல தேசத்தாருக்குள்ளும் உமது சுவிசேஷம் பரவும்படி உழைத்துவரும் யாவரையும் வழி நடத்தி, ஆசீர்வதித்து, எல்லாக் கல்விச்சாலைகளையும், வித்தியாலயங்களையும், வைத்திய சாலைகளையும், உமது ஆவியானவரால் பிரகாசிப்பித்தருளுமென்று நாங்கள் கேட்கும்போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை ஏற்றுக்கொண்டருளுமே, தேவா - இப்போ
ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்.

குரு: உமது பரம ஆதரவினாலே, நாங்கள் பஞ்சத்தினின்றும், வறுமையினின்றும், காக்கப்பட்டு, பூமியின் நற்பலன்களை, அதன்தன் காலத்தில் நன்றியறிதலான இருதயத்தோடு அனுபவிக்கும்படி, எங்களுக்குக் கிருபை செய்தருளுமென்று நாங்கள் கேட்கும் போது,

சபை ஏற்றுக்கொண்டருளுமே தேவா - இப்போ
ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்.

குரு: உம்முடைய ஜனங்கள் எல்லாரும் விசேஷமாய் இவ்விடத்தில் கூடி வந்திருக்கிற இந்தச் சபையாரும், சாந்த இருதயத்தோடும், தகுந்த வணக்கத்தோடும், உமது பரிசுத்த வசனத்தைக் கேட்டு, உட்கொண்டு தங்கள் வாழ்நாளெல்லாம் பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்களாய், உமக்கு உத்தம ஊழியஞ் செய்ய அவர்களுக்கு உமது பரம கிருபையைக் கொடுத்தருளுமென்று நாங்கள் கேட்கும் போது,

சபை ஏற்றுக்கொண்டருளுமே, தேவா - இப்போ
ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்.

குரு: நிலையில்லாத இந்த ஜீவகாலத்தில் துன்பம், துக்கம், வறுமை, வியாதி முதலான உபத்திரவங்களால் வருத்தப்படுகிற யாவரையும், உமது தயவினாலே தேற்றி ஆதரித்தருளுமென்று நாங்கள் கேட்கும் போது-

சபை ஏற்றுக்கொண்டருளுமே, தேவா - இப்போ
ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு: உம்மிடத்தில் விசுவாசமும் பயபக்தியுமுள்ளவர்களாய் ஜீவித்துப் போன உமது அடியார் எல்லாருக்காகவும் நாங்கள் உம்மைத் துதித்து அவர்களோடு கூட நாங்களும் உமது பரம இராச்சியத்தில் பங்குபெறும்படி அவர்கள் காட்டிய நன்மாதிரியைப் பின் பற்ற எங்களுக்குக் கிருபை செய்தருள வேண்டுமென்று நாங்கள் கேட்கும்போது,

சபை ஏற்றுக்கொண்டருளுமே, தேவா - இப்போ
ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்

(உதவி)குரு அபிசேஷகத்துக்கான ஜெபம்

குரு: (உதவிக்) குருக்களாக இப்பொழுது அபிஷேகம் பெற்றிருக்கும் இவர்கள், கடவுளின் நாமத்திற்கு மகிமையுண்டாகும் படி உத்தமாய் ஊழியம் செய்ய வேண்டுமென்று கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக

சபை ஏற்றுக் கொண்டருளுமே, தேவா - இப்போ
ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்

குரு- தெய்வ பணிவிடைக்காரரான மனைவிகளும் குடும்பத்தாரும், விசேஷமாய் இப்பொழுது அபிஷேகம் பெற்றிருக்கிற இவர்களுடைய வீட்டாரும் கிறிஸ்துவின் அன்பை எடுத்துக்காட்டும்படி கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

சபை ஏற்றுக் கொண்டருளுமே, தேவா - இப்போ
ஏழையின் செபத்தை இயேசுவின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியட்சர் சர்வ வல்லமையுள்ள கடவுளே, சகல ஞானத்திற்கும் காரணரே, நாங்கள் வேண்டிக்கொள்ளுவதற்கு முன் எங்கள் அவசியங்கள் உமக்குத் தெரியும் நாங்கள் அறியாமல் கேட்கிறோம் என்பதும் உமக்குத் தெரியும். தேவரீர் எங்கள் பல வீனங்களைப் பார்த்து இரங்கி, நாங்கள் எங்கள் அபாத்திரத்தினிமித்தம் துணிந்து கேட்கக் கூடாதவை களையும், எங்கள் குருட்டாட்டத்தினிமித்தம் கேட்கத் தெரியாதவைகளையும் உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் எங்களுக்கு அநுக்கிரகித்தருளும் ஆமென்

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், பிதாவாகிய கடவுளுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட எப்பொழுதும் இருப்பதாக. ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பம் பிட்குதல்

எல்லாரும் எழுந்து நிற்க குரு சொல்வது:

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவது எவ்வளவு நன்மையும் எவ்வளவு இன்பமுமானது

அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால். அநேகரான நாம், ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்;

சபை நான் அவருடைய கூடாரத்திலே, ஆனந்த பலிகளையிட்டுக் கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்:

'சமாதானம்' இங்கே கொடுக்கலாம்:

ஒரு கீதம் பாடப்படும். (அப்போழுது சபையாருடைய தர்மங்களுடன் பரிசுத்த நற்கருணைக்கு வேண்டிய அப்பமும் திராட்ச ரசமும் முன்னால் கொண்டுவரப்பட்டு திருமேசையில் வைக்கப்படும். கொண்டுவருபவர்கள், பின்வரும் ஜெபம் சொல்லப் படுகையில், திருமேசையின் முன் நிற்பார்கள்.)

எல்லாரும் இன்னும் நின்றுகொண்டிருக்க, குரு சொல்வது:

பரிசுத்த பிதாவே, உமது கிருபாசனத்தண்டையில் பிரவேசிப்பதற்குப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உமது அருமையான குமாரனின் இரத்தத்தினால் எங்களுக்கு உண்டு பண்ணினீரே; நாங்கள் அபாத்திரராயினும் அவர் மூலமாக உம் மண்டை வருகிறோம். எங்களையும் இந்தக் காணிக்கைகளையும் உம்முடைய நாம மகிமைக்காக அங்கீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரித்து உபயோகிக்கும் படியாக தாழ்மையோடு வேண்டிக் கொள்ளுகிறோம். வானத்திலும் பூமியி லும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள் உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுக்கிறோம்.

ஆமென்.

(காணிக்கைகளைக் கொண்டுவந்தவர்கள் இப்பொழுது தங்கள் இடங்களுக்குத் திரும்புவார்கள்.)

குரு: செபம் பண்ணக் கடவோம்

(குருவும் ஜனங்களும் முழங்காற்படியிட்டுச் சேர்ந்து சொல்வது)

ஐயா, பிரதான குரு ஆயர் அன்று சீஷர்
மெய்யாய்ப் பிரசன்னம் பெற்ற மேன்மை
அதுபோல
துய்யா, அப்பம் பிட்கும் போதுன் தூய
பிரசன்னம்
செய்வாய் அருளாவி பிதாவோடு வாழும்
தேவே

(குரு இப்பொழுது எழுந்து நின்று சொல்வது:)

குரு: கர்த்தர் உங்களோடு இருப்பாராக,

சபை அவர் உமது ஆவியோடும் இருப்பாராக

குரு: உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்

சபை எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்து கிறோம்

குரு: நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத் திரம் செலுத்தக் கடவோம்

சபை அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு: கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் எக்காலத்திலும், எவ்விடத்திலும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறது தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷிசித்த கடமையுமாயிருக்கிறது,

☆ தகுந்த முகவுரை,

பிதா என்னை அனுப்பினது போல, நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சீஷர்களுக்கு அதிகாரம் கொடுத்த எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மைத் துதிக்கக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம்,

அரிகாம்போதி ரூபதாளம்

1 ஆதலால் சுரரோடதி உயர் சுரர் கணமே
தேவசபையுடனே திருப்பேர் வாழ்த்துவமே
2 சேனைக் கடவுளே, நீர் பரிசுத்தர் பரிசுத்தராய்
ஆன பரிசுத்தரே, அருள் நேர் ஆதவனே.
3 வானம் புவியுமதே மகிமையில் நிறைந்தனவே;
தேவரீருமக்கே மகிமையின் துதி ஆமென்,
4 தேவப்பெயரில் வந்தீர், வருகிறீர்; துதி உமக்கே;
மேவுன்ன தங்களிலே மிக ஓசன்னாவே,

குரு: ஆம் பிதாவே நீர் பரிசுத்தர், நீர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், தேவரீர் மனிதரில் உருக்கமாய் அன்பு கூர்ந்து, உமது ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்து எங்கள் தன்மையைத் தரித்துக் கொள்ளவும், சிலுவையில் மரித்து எங்களை மீட்டுக் கொள்ளவும், அவரைத் தந்தருளினீரே; அவர் சிலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையில் ஒரே தரம் தம்மைத் தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்துச் சர்வ உலகத்தின் பாவங்களை யும் நிவிர்த்தி செய்வதற்கு நிறைவும் பூரணமும் போந்ததுமான பலியையும், காணிக்கையையும், பரி காரத்தையும் செலுத்தினதுமல்லாமல், தமது அரு மையான மரணத்தை என்றைக்கும் நினைப்பூட் டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்ப வருமள வும், நாங்கள் அதை அனுசரித்து வரும்படி தமது பரிசுத்த சுவிசேஷத்தில் கட்டளையிட்டருளினாரே அவர் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே, அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது உங்களுக்காகக் கொடுக்கப் படுகிற என்னுடைய சரீரம்; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

அப்படியே, போஜனம் பண்ணின பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்து, + ஸ்தோத்திரம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள், இது பாவமன்னிப் புண்டாகும்படி உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடை இரத்தம். இதைப் பண்ணும் பொழுதெல்லாம், என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம் பற்றினார்.

தேசிகதோடி ரூபகதாளம்

தேவனே, ஆமென் உன்றன் மாமரணத்தைத்
உன்னுவோம்; அன்று நீர்
ாவை வென்றுயிர் பெற்றெழுந் ததும்
கூறுவோம்; கடை நாளிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலோ னென மேவுவீர்; அது
காத்திருந்திடுவோம், எங்கள்
நாவினால் துதி தோத்திரம், கிறிஸ்
தையனே, உமக் கேயரோ

குரு: ஆதலால் பிதாவே உமது, குமாரனாகிய எங்கள் ஆண்டவரின் அருமையான பாடுகளையும், மரணத்தையும் மகிமையான உயிர்த்தெழுதலையும் பரமேறுதலையும் நினைவுகூர்ந்து, உமது அடியார்களாகிய நாங்கள் அவருடைய கட்டளையின்படியே, அவர் திரும்ப வருமளவும், அவரை நினைவுகூர்ந்து இதைச் செய்கிறோம். அவரில் நீர் எங்களுக்காக நிறைவேற்றின பூரண மீட்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

நவரோஸ் சாப்புதாளம்

கர்த்தனே, எங்கள் தேவனே!
பக்தியாகத் துதிக்கிறோம்
அத்தன் நீ மகிமைப்பட
நித்தமும் புகழ்ந்தேத்துவோம்!

குரு: இரக்கமுள்ள பிதாவே, நாங்கள் பிட்கிற அப்பம், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயும், நாங்கள் ஆசீர்வதிக்கிற பாத்திரம், கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயுமிருக்கும்படி எங்களையும், நீரே தந்த இந்த அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் உமது பரிசுத்த ஆவியினால் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று மிகுந்த தாழ்மையோடு பிரார்த்திக்கிறோம் நாங்களெல்லாரும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவில் கூட்டி, இணைக்கப்பட்டவர்களாகி, விசுவாசத்தில் ஒருமைப்படவும், தலையாகிய அவருக்குள் எல்லாவற்றிலேயும் வளரவும் கிருபை செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரோடும் பரிசுத்த ஆவியோடும் ஐக்கியமாயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய உமக்கு, அவர் மூலமாய்ச் சகல கனமும் மகிமையும் என்றென் றைக்கு முண்டாவதாக. ஆமென்

நமது இரட்சகராகிய கிறிஸ்து கற்பித்தபடி அவரில் நமக்கு அருளப்பட்ட தைரியத்தோடே ஜெபிப்போமாக:

நாதநாமக்கிரிய ஆதிதாளம்

பரமண்டலங்களில் வீற்றிருக்கும்
பரமபிதாவே, எந்நாளும்
பரிசுத்தப் படுக உம் நாமம்
பரிவுடன் வருக உம் இராச்சியம்,
பரலோகத்தில் உமது சித்தம்
பண்புடன் செய்யப் படுவதுபோல்
தரணியிலுமது சித்தமுமே
தவறாது செய்யப்படுக சதா,
அன்றன்றுள்ள எம் ஆகாரம்
அன்புடன் எங்களுக் கிந்தருளும்
நன்றயலார் கடன் யாம் மன்னிக்கும்
நன்னயம் போலெம் பிழை மன்னியும்
தேவே, சோதனைக் கெமை விலக்கி,
தீமையினின்றெமை இரட்சியுமே
மேவும் இராச்சியம், வல்லமை, மகிமை
மிகவும் உமதென்றுமே ஆமென்

(சற்றுநேர அமைதியின் பின்)

நாதநாமக்கிரிய ரூபகதாளம்

ஐயனே, எங்கள் நீதியால் அல்ல,
அப்பன் உன்தய வன்பினால்
துய்ய பந்தியில் சேர்கிறோம்; விழும்
துணிக்கை தன்னையும் ஏற்க நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யும் பாத்திரரல்ல; நேசரே,
உன்னத அன்பிரக்க மார்
தெய்வமே, சுதன் இயேசு சிந்திய
இரத்தந் தால் சரீரத்தினால்,
பாவ தோஷமும் ஆவியும் சுத்த
மாகவே அரு ளீகுவாய்
சாவிலா தவ ருக்குள்ளே நாமும்,
நமக்குள்ளே அவரும் வர
தேவ இயேசு சரீர மோடு செந்
நீர் அருந்திட ஆக்குவாய்
ஆவலாயெமக் காசிமாரி பெய்
தருளுவாய், கருணாகரா:

குரு எழுந்து நின்று அப்பத்தை பிட்டுச் சொல்வது:

நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா?

கடவுளுடையவைகள் கடவுளுடையவர்களுக்கே

அவர் மௌனமாக அப்பத்தைப் பிட்களாம்

பணிவிடைக்காரரும் சபையாரும் இப்பொழுது நற்கருணை பெறுவர்கள்

நற்கருணை கொடுக்கும் போது சொல்லவேண்டிய வார்த்தைகளாவன

ஜீவ அப்பமாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரம்.

மெய்யான திராட்சையாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சமயத்தில் கீழ்க்கண்ட கீதம் சொல்ல அல்லது பாடப்பாடலாம்.

சபை உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே எங்களுக்கு இரங்கும்.

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டியே, எங்களுக்கு இரங்கு.

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தவ ஆட்டுக்குட்டியே, உமது சமாதானத்தைத் தாரும்.

அல்லது வேறு ஒரு கீதம் பாடலாம்

எல்லாரும் பங்கு பெற்றபின் சபையார் முழங்காலில் நிற்க, குரு சொல்வது.

குரு: கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தை விசுவாசத்தினால் பெற்றுக் கொண்டவர்களாகிய நாம் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோமாக,

சர்வ வல்லமையுள்ள கடவுளே, பரம பிதாவே உமது நேசகுமாரனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவுக்குள், எங்களை உமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு, அவருடைய விலைமதியாத திருச்சரீரமும் இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தால் எங்களைப் போசித்திருக்கிறீர்; எங்கள் பாவங்களை மன்னித்து, நித்திய ஜீவனை எங்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கிறீர் அளவிடப்படாத இந்த நன்மைகளுக்காக உண்மை ஸ்தோத்திரிக்கிறோம் சரீரமும் ஆத்துமாவுமாகிய எங்களை, பரிசுத்தமும் ஜீவனுமுள்ள பலியாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம் இதுவே நாங்கள் செய்யத்தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மீக ஆராதனை நாங்கள் இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷந் தரியாமல், தேவரீருடை நன்மையும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, எங்கள் மனம் புதிதாகிற தினாலே மறுரூபமாகும்படி எங்களுக்கு அருள்புரியும், கடைசியில் நாங்கள் உமது பரிசுத்த வான்கள் அனைவரோடும் உமது நித்திய இராட்சியத் ஆனந்தத்தை அடையத்தக்கதாக, இவ் வுலகத்தில் உமக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்குக் கிருபை செய்யும் உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாய்ச் சதா காலமும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இவைகளை வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஆரபி ஆதிதாளம்

ஆமென், எங்கள் தேவனுக்குத்
துதி மகிமை ஞானமுடன்
தேமதுரத் தோத்திரமும்
கனம் வலிமை பெலனோடு,
நாமிருக்கும் காலமெல்லாம்
நித்தியமும் உண்டாக!
ஆமென் எனத் துதி யெடுப்போம்,
அண்டர் குழாம் ஒடு சேர்ந்தே,

பின் குரு கடைசி ஆசீர்வாதங் கூறுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org